# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

## ஒன்று பட்ட போராட்டம்
## கோவை மாவட்ட ஒப்பந்த ஊழியரின் துயரோட்டியது

அன்பார்ந்த தோழர்களே,

கோவை மாவட்டத்தில் ஒப்பந்த ஊழியர்களின் ஊதியம் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து 21.05.2015 கோவை மாவட்ட BSNL ஊழியர் சங்கமும் TNTCWU மாவட்ட சங்கமும் இணைந்து காலவரையற்ற உண்ணாவிரத போராட்டத்தை துவங்கினர். BSNL ஊழியர் சங்கத்தின் மாவட்ட தலைவர் தோழர் K.சந்திரசேகரன், மாவட்ட செயலாளர் தோழர் C.ராஜேந்திரன், உதவி மாநில செயலாளர் தோழர் S.சுப்ரமணியன், TNTCWU மாவட்ட செயலாளர் தோழர் ரவிச்சந்திரன் ஆகியோர் இந்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த போராட்டத்தின் முதல் நாளன்று TNTCWU மாநில செயலாளர் தோழர் c.வினோத்குமார், BSNL ஊழியர் சங்கத்தின் தமிழ் மாநில துணைத் தலைவர்கள் தோழர் K.மாரிமுத்து, தோழர் V.வெங்கட்ராமன், மாநில அமைப்பு செயலாளர் தோழர் A.முகமது ஜாபர் ஆகியோர் தலைமையில் 200க்கும் மேற்பட்ட தோழர்கள் திரண்டனர். ஆனால் மாவட்ட நிர்வாகம் நமது கோரிக்கைக்கு செவி சாய்க்கவில்லை. போராடும் ஊழியர்களின் கோரிக்கைகளை பரிசீலிக்கக் கூட கோவை மாவட்ட நிர்வாகம் தயாராக இல்லாத நிலை இருந்தது.

இந்நிலையில் தோழர்களின் கால வரையற்ற வேலை நிறுத்தம் இரண்டாம் நாளாய் தொடர்ந்தது. மாவட்டம் முழுவதும் 300க்கும் மேற்பட்ட தோழர்கள் போராட்டத்தில் பங்கேற்றனர். அன்று மதியம் வரை நிர்வாகம் பேச்சு வார்த்தைக்கு அழைக்காத நிலையில், BSNL ஊழியர் சங்கத்தின் தமிழ் மாநில செயலாளர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன் தலைமையில் மாவட்டம் முழுவதும் இருந்த தோழர்கள் அனைவரும் கோவை மாவட்ட முதன்மை பொது மேலாளர் அவர்களை நேரடியாக சந்தித்து “பெருந்திரள் முறையீடு” செய்தனர். அரை மணி நேரத்திற்கும் மேல் நடைபெற்ற அந்த சந்திப்பிற்கு பின் கோவை மாவட்ட நிர்வாகம் பிரச்சனைகளை தீர்வு காண அரை மணி நேரம் கால அவகாசம் கேட்டது. நிர்வாகத்தின் வேண்டுகோளை ஏற்று மதியம் நடைபெற்ற பேச்சு வார்த்தையில் முதன்மை பொது மேலாளர் உள்ளிட்ட ஆறு அதிகாரிகளுக்கும், நமது மாநில செயலாளர் தலைமையில் நமது சங்கங்களின் சார்பில் பத்து தோழர்களும் பங்கேற்றனர். இந்த பேச்சு வார்த்தை மிக சுமுகமாக நடைபெற்றது. நமது கோரிக்கைகள் ஒன்றை தவிர அனைத்தையும் நிர்வாகம் ஏற்றுக் கொண்டது.

ஒப்பந்த ஊழியர்கள் பணியாற்றிய அனைத்து நாட்களுக்கும் மாவட்ட நிர்வாகம் ஊதியத்தை வழங்கவும், பணியில் இருந்து நீக்கப்பட்ட அனைத்து ஒப்பந்த ஊழியர்களையும் மீண்டும் 25.05.2015 முதல் பணிக்கு எடுத்துக் கொள்ளவும், ஒப்பந்ததாரர் ஊழியர்களுக்கு கட்ட வேண்டிய EPF,ESI பணத்தை அந்தந்த மட்டத்தில் கட்ட உரிய நடவடிக்கைகள்

மேற்கொள்ளப்படுவதற்கும், போனஸ் பணத்தை அந்த ஊழியர்களுக்கு கிடைக்க செய்வதற்கும் உரிய நடவடிக்கைகளை விரைவில் எடுக்கவும், ஆர்ப்பாட்டம் நடத்திய ஊழியர்களுக்கு கொடுக்கப்பட்ட DIES-NON உத்தரவை திரும்ப பெறுவது என்றும் நிர்வாகம் ஏற்றுக் கொண்டது. மீதமுள்ள கோரிக்கைகள் அனைத்தையும் ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் முடிப்பது என்றும் பேச்சு வார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டது.

கோவை மாவட்ட BSNL ஊழியர் சங்கம் மற்றும் TNTCWU ஊழியர்களின் ஒன்றுபட்ட போராட்ட உணர்வும், ஊழியர் பிரச்சனைகளுக்காக இரண்டு நாட்கள் உண்ணாவிரதம் இருந்த தலைவர்களின் தொழிற்சங்க உணர்வும் நிர்வாகத்தை நமது கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள வைத்தது. ஒன்று பட்ட போராட்டம் வெற்றிபெறும் என்பதை கோவையில் நடைபெற்ற இந்த போராட்டம் மீண்டும் உறுதி செய்துள்ளது.

இந்த போராட்டத்திற்கு சென்னையில் இருந்து தொடர்ந்து மிகச்சரியாக வழிகாட்டிய BSNL ஊழியர் சங்கத்தின் அகில இந்திய உதவி பொது செயலாளர் தோழர் S.செல்லப்பா அவர்களுக்கும், இந்த இரண்டு நாட்களும் உண்ணாவிரதம் இருந்த BSNL ஊழியர் சங்கத்தின் மாவட்ட தலைவர் தோழர் K.சந்திரசேகரன், மாவட்ட செயலாளர் தோழர் C.ராஜேந்திரன், உதவி மாநில செயலாளர் தோழர் S.சுப்ரமணியன், TNTCWU மாவட்ட செயலாளர் தோழர் ரவிச்சந்திரன் ஆகியோருக்கும், இரண்டு நாட்களாய் அவர்களோடு இருந்து வழிகாட்டிய TNTCWU மாநில செயலாளர் தோழர் C.வினோத்குமார் அவர்களுக்கும், இந்த போராட்டத்தில் இரண்டு நாட்களும் கல்ந்துக் கொண்ட, கோவை மாவட்டத்தை சார்ந்த BSNL ஊழியர் சங்க, TNTCWU மாநில நிர்வாகிகளையும், இந்த இரண்டு நாட்களும், போராட்ட கனலை நெஞ்சில் ஏந்தி நூற்றுக் கணக்கில் இந்த போராட்டத்தில் கலந்துக் கொண்டு வெற்றி பெறச் செய்த கோவை மாவட்டத்தை சார்ந்த தோழர்களுக்கும், தமிழ் மாநில சங்கம் நெஞ்சு நிறை வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்கிறது.

அதே போல காலதாமதம் ஏற்பட்டாலும், நமது கோரிக்கைகளை முழுமையாக ஏற்றுக் கொண்ட கோவை மாவட்ட நிர்வாகத்திற்கும் நமது நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கிறோம். இந்த போராட்டத்தின் இறுதியில் நமது கோரிக்கைகள் முழுமையாக நிறைவேறியுள்ள சூழ்நிலையில், கோவை மாவட்டத்தின் இலக்குகளை முழுமையாக அடைய நமது தோழர்களும் தங்களின் பங்கினை முழுமையாக செலுத்துவார்கள் என நாம் நிர்வாகத்துடன் கொடுத்த வாக்குறுதியையும் நமது தோழர்கள் முழுமையாக நிறைவேற்றி, கோவை மாவட்டத்தை லாபமீட்டும் மாவட்டமாக மாற்றிடுவார்கள் என முழுமையாக நம்புகிறோம்.

ஒன்று பட்ட போராட்டம் ஒன்றே நமது துயரோட்டும் என்பதை மீண்டும் நிரூபித்த தோழர்களுக்கு மீண்டும் தமிழ் மாநில சங்கம் தனது பாராட்டுதல்களை உரித்தாக்கிக் கொள்கிறோம்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

சென்னை
23.05.2015.

(A.பாபு ராதாகிருஷ்ணன்)
மாநில செயலாளர்.